1564

**புழல், மத்திய சிறை –2 சிறைக்கண்காணிப்பாளர் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை திரு.இரா.கிருஷ்ணராஜ், பி.எஸ்சி.,**

எண்.5766/பொ.1/2020 நாள்.29.01.2022

பொருள்: சிறைகள் – மத்தியசிறை 2, புழல், சென்னை - புதியதாக நியமனம் செய்யப்பட்ட திரு.க.மாரிமுத்து, இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறைபடுத்தி ஆணையிடுதல் - குறித்து.

பார்வை: 1 காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண்.21780/இ.எஸ்.1/2020-19, நாள்.24.07.2020.
2 இவ்வலுவலகக் கடித எண்.5766/பொ.1/2020, நாள்.05.08.2020.

******

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அவர்களின்குறிப்பாணையின்படி, பணி நியமனம் செய்யப்பட்ட திரு.க.மாரிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவர் பார்வை-2ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி இச்சிறையில் 05.08.2020 மு.ப முதல் தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவரது கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மையும் சரிபார்க்கப்பட்டது.

2) இவர் பணியில் இணைந்த நாளான 05.08.2020 முற்பகல் முதல் இவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

3) இவர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

4) மேலும், இவரது பணி வரன்முறை சென்னை உயர் நீதிமன்றத்திலும், மதுரை கிளையிலும் Group IV 2018-2019 மற்றும் 2019-2020 பணி நியமனம் (Recruitment) தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் முடிவுக்கும், இது தொடர்பான ஏனைய குற்ற வழக்குகளின் முடிவுக்கு உட்பட்டதாகும்.

5)இவர் தகுதிகாண் பருவத்தில் அரசு நடைமுறை நூல் மற்றும் பவனிசாகர் அடிப்படை பயிற்சியிலும் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

6) இச்செயல்முறை ஆணையைப் பெற்றமைக்கு ஒப்புதல் அளித்திட கோரப்படுகிறது.

-ஒம்./–
சிறைக்கண்காணிப்பாளர்
மத்திய சிறை -2, புழல்.

**பெறுநர்**
சம்மந்தப்பட்டவர்

**நகல்**
1) பொ.2 (நடப்பு எண்ணில்) தக்க நடவடிக்கைக்காக / பணிப்பதிவேடு
(மேற்கண்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடும் பொருட்டு)
2) பொ.1 / பொ.3
3) கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நிர்வாக அலுவலர்
மத்தியசிறை-2, புழல்.
29/01/2022

G1 2022

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா